சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:14.03.2023

வா.சா.1 – கார்த்திகைச்செல்வி, க/பெ – செந்தில்நாத்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் M.Sc., M.Ed., படித்துள்ளேன். நான் வேலை பார்க்கவில்லை. நான் ஸ்ரீவித்யா கல்லூரியில் வேலைபார்த்து வந்தேன் என்றால் சரியல்ல. எங்களது திருமணம் பெரியோர்கள் நிச்சயித்து எனது சம்மதத்துடன் நடந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு நானும் எதிர்மனுதாரரும் பரஸ்பரம் பேசிக்கொண்டு அதன்பின்னர் 13.12.2004 ம் தேதி நடந்தது. எனது பிராதில் பிரதிவாதி மற்றும் அவர் பெற்றோர் கேட்டுக்கொண்டதற்கிணங்க எனது பெற்றோர்கள் வரதட்சணையாக எனக்கு 60 பவுன் தங்க நகையும் ரூ.1,00,000/– மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் கொடுத்தனர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதுபோல் பிரதிவாதி எந்த வரதட்சணையும் கேட்கவில்லை என்றால் சரியல்ல கேட்டதன் பேரில் தான் கொடுத்தார்கள். எனது பிராதில் 60 பவுன் தங்க நகையும் ரூ.1,00,000/– மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் எனக்கு கொடுத்ததாகத்தான் சொல்லியுள்ளேன் என்றும் பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும் எனக்கும் விவாகரத்து வழங்கும்போது பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. விவாகரத்து வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. நான் தாக்கல் செய்த பிராதில் எனக்கு திருமணத்தின் போது கொடுத்த பொருட்களை திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை என்று எங்கும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்த

எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்க்கவில்லை வழக்கறிஞரிடமும் கேட்கவில்லை. அந்த எதிர்வழக்குரையை படித்து பார்த்தால் அதில் உள்ள விவரம் உண்மையா இல்லையா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரையில் எங்களது திருமணத்தின்போது எந்த வரதட்சணையும் கேட்கவில்லை என்றும் எனக்கு வரதட்சணையாக என்ன கொடுத்தார்கள் என்று பிரதிவாதிக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. திருமணம் நடந்த மூன்று நாட்களில் எனக்கு இந்த திருமணத்தில் விருப்பம் இல்லை என்றும் கட்டாயத்தின் பேரில் தான் திருமணத்திற்கு நான் ஒப்புக்கொண்டதாகவும் இந்த திருமணத்தில் என்க்கு முழு ஈடுபாடு இல்லை என்று பிரதிவாதியிடம் கூறினேன் என்றால் சரியல்ல. அதை காரணமாக கொண்டு நான் பிரதிவாதியுடன் இல்லற வாழ்க்கைக்கும் சம்மதிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கெஞ்சி கேட்டதன் பேரில் மூன்று நாட்கள் மட்டும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தென்னக ரயில்வேயில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். பணியின் காரணமாக பிரதிவாதிக்கு அடிக்கடி பணிமாறுதல் செய்யப்படுவார் என்றால் அது எனக்கு தெரியாது. அரசு பணியில் இருப்பவர் பொதுவாக வெவ்வேறு இடங்களுக்கு பணிமாறுதல் செய்யப்பட்டால் அவரது குடும்பத்தையும் அங்கு அழைத்து செல்லவேண்டி வரும் என்றால் சரிதான். பிரதிவாதி B.Sc படித்துள்ளார். பிரதிவாதி என்னைவிட குறைவான கல்வி படித்துள்ளார் என்றால் திருமணத்தின் போது நானும் B.Sc மட்டும் தான் படித்திருந்தேன். திருமணத்திற்கு பின்பு எனது கணவரிடம் நான் கார் பங்களாவுடன் வசதியாக வாழ வேண்டியவள் என்றும் உங்களை திருமணம் செய்து

கொண்டு மேற்படி ஆடம்பர வாழ்க்கை கிடைக்கவில்லை என்று பிரதிவாதியை குத்திகாட்டி மன ரீதியாக கொடுமைப்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. நான் எனது கணவருக்கு மரியாதை கொடுக்காமல் ஒருமையில் வாடா போடா என்று பேசினேன் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து பிரதிவாதியுடன் 8 மாதங்கள் மட்டும் வாழ்ந்ததாகவும் இந்த 8 மாதங்களிலும் இல்லற வாழ்க்கையில் ஈடுபடாமல் வீண் சண்டை சச்சரவு செய்துவந்தேன் என்றால் சரியல்ல. குடும்ப வாழ்க்கைக்கு இருக்குமாறு கட்டாயப்படுத்தினால் தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டினேன் என்றால் சரியல்ல. நான் 13.07.2005 ம் தேதி எனது கணவர் மற்றும் அவர் குடும்பத்தாரிடம் சொல்லாமல் வீட்டைவிட்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல, அன்றைய தேதி தான் எனக்கு வளைகாப்பு நடத்தி வீட்டில் இருந்து அழைத்து சென்றார்கள். அதன்பின்னர் என் கணவர் சேர்ந்து வாழ அழைத்ததற்கு மறுத்து பிரதிவாதியையே விவாகரத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் தற்கொலை செய்துகொள்வேன் என்று மிரட்டினேன் என்றால் சரியல்ல. என்னுடைய தொடர் வற்புறுத்தலின் பேரில் பிரதிவாதி மதுரை குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி HMOP.470/2005 தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. நான் கேட்டதன் பேரில் இல்லாமல் அவராக தாக்கல் செய்தார். அந்த வழக்கில் பிரதிவாதி மீது பல குற்றச்சாட்டுகள் கூறி ஆட்சேபணை தாக்கல் செய்தேன் என்றால் நடந்த விவரங்களை கூறினேன். அந்த மனுவில் இருதரப்பு விசாரணைக்கு பின்னர் 13.08.2010 ம் தேதி விவாகரத்து வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து மதுரை உயர்நீதிமன்றத்தில் CMA.1437/2010 என்ற மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

அந்த மேல் முறையீட்டில் என் தரப்பில் சில அவணங்கள் தாக்கல் செய்ய வாய்ப்பளித்து மீண்டும் மதுரை குடும்ப நல நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். இருதரப்பு விசாரணைக்கு பின்பு 21.04.2015 ம் தேதி மேற்படி விவாகரத்து மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த உத்தரவை எதிர்த்து பிரதிவாதி மதுரை உயர்நீதிமன்றத்தில் CMA.844/2015 என்ற மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டு மனு 27.09.2018 ம் தேதி அனுமதிக்கப்பட்டு எங்களுக்கு விவாகரத்து வழங்கி உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவின் மீது நான் இது வரை மேல்முறையீடு செய்யவில்லை என்றால் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு மேல்முறையீடு தாக்கல் செய்ததற்கான எவ்வித ஆதாரமும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் எங்கள் இருவருக்கும் வழங்கப்பட்ட விவாகரத்து பரிகாரம் இன்றுவரை ஊர்ஜிதத்தில் உள்ளது என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியவில்லை. நான் மதுரை குடும்ப நல நீதிமன்றத்தில் HMOP.470/2005 மனுவில் இடைக்கால மனு தாக்கல் செய்து அதன்பேரில் மாதந்தோறும் ரூ.3000/- ஜுவனாம்சம் கொடுக்க உத்தரவிட்டதன் பேரில் இந்த பிரதிவாதியும் மேற்படி மெயின் மனு முடியும்வரை ஜுவனாம்சத்தொகையை தவறாமல் கொடுத்துவந்தார் என்றால் சரிதான் என்று கூறிவிட்டு பின்னர் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். 27.09.2018 ம் தேதி சென்னை உயர் நீதிமன்றம் மதுரைக்கிளையில் விவாகரத்து பரிகாரம் வழங்கப்பட்ட பிறகு ஆறு மாதங்கள் கழித்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்த பிராதில் 5 முதல்

7 பாராக்களில் சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஏற்கனவே பிரதிவாதி தாக்கல் செய்த விவாகரத்து வழக்கில் விவாதிக்கப்பட்டு மதுரை உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் எனவே மேற்படி 5 முதல் 7 பாராக்களில் சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்கள் இந்த பிரதிவாதி தரப்பில் மறுக்கப்படுகிறது என்றும் மேற்படி குற்றச்சாட்டுகள் மதுரை உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுவிட்டதால் மேற்படி குற்றசாட்டுக்களை இவ்வழக்கில் முன்நிறுத்த முடியாது என்றால் சரியல்ல. அதன் பின்பு மாதம்தோறும் ஜுவனாம்கம் கேட்டு நீதித்துறை நடுவர் எண்.2ல் மனு தாக்கல் செய்தேன் என்றும் அந்த மனுவில் இந்த பிரதிவாதி தவறாமல் ஆஜராகி ஜுவனாம்சத்தொகையை செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல தொடர்ச்சியாக கொடுத்ததில்லை. பிரதிவாதி ஜுவனாம்சத்தொகையை தவறாமல் செலுத்தி வந்தார் என்றும் மேற்படி தொகையை பெற்றுக்கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தில் ஜுவனாம்சத்தொகையை கூடுதலாக கேட்டு பல மனுக்களை தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் நீதித்துறை நடுவர் எண்.2ல் தாக்கல் செய்த ஜுவனாம்ச மனு வழக்கு கோப்புகளை வரவழைத்தால் நான் தாக்கல் செய்த மனுக்கள் பற்றிய விவரங்கள் தெரியவரும் என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் மொத்த ஜுவனாம்சம் கொடுத்து சமரசமாக செல்ல பேச்சு வார்த்தை நடத்தியும் நான் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)